# "அரசாங்கத்தின்மீது 90% இளையர்கள் ஓரளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளனர்"

***Seithi Mediacorp,*** 23 July 2022

10இல் 9 சிங்கப்பூர் இளையர்கள் அரசாங்கத்தின்மீது ஓரளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

68 விழுக்காட்டினர் இளையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகாண முடியும் என்று நம்புவதாகத் தெரிவித்தனர்.

சுமார் மூவாயிரம் இளையர்களிடம் கொள்கை ஆய்வுக் கழகமும், தேசிய இளையர் மன்றமும் இணைந்து ஆய்வொன்றை நடத்தின.

சிங்கப்பூரின் ஒருமைபாட்டுக்கு இளையர்களின் சமூக வள மேம்பாடும், நம்பிக்கையும் முக்கியப் பங்காற்றுவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டது.

அதை அடைய அரசாங்கம் இளையர்களுடன் இன்னும் கூடுதலான தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆய்வு பரிந்துரைக்கிறது.

அதன்வழி கொள்கைகளில் இடைவெளியைக் குறைக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

வேலை-வாழ்க்கைச் சமநிலை, தங்குமிடங்கள், இளம் பெற்றோருக்கான ஆதரவு ஆகிய அம்சங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தப் பரிந்துரைக்கப்பட்டது.

'முன்னேறும் சிங்கப்பூர்' கலந்துரையாடல் நிகழ்வில் ஆய்வின் கண்டுபிடிப்புகள் பகிரப்பட்டன.